# சுகாதார அமைச்சு

சகல பிரதி பணிப்பாளர் நாயகங்கள்
பணிப்பாளர்/ தனிமைப்படுத்தல்
பிரதான தொற்று நோயியல் நிபுணர்
சுகாதார சேவைகளுக்கான மாகாண பணிப்பாளர்கள்
சகல வைத்தியசாலைகளதும் பணிப்பாளர்கள்/ மருத்துவ கண்காணிப்பாளர்கள்
தனிமைப்படுத்தல்/ இடைக்கால பராமரிப்பு நிலையங்கள்
பிராந்திய தொற்று நோயியல் நிபுணர்கள்
சுகாதார மருத்துவ அதிகாரிகள்

## கொவிட்-19 தொற்றுநோய்க்காலத்தின்போது, வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்

இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் உட்பட, சகல பயணிகளும் நாட்டுக்குள் நுழைவதற்கான அனுமதியை வெளிநாட்டமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது இலங்கை சுற்றுலாத்துறையிடமிருந்து பெற்றிருக்கவேண்டும்.

இலங்கை விமான நிலையத்தில் வந்தடைந்ததும் சகல பயணிகளும் சுகாதார அறிவித்தல் படிவத்தினைப் பூர்த்திசெய்து விமான நிலைய சுகாதார அலுவலகத்தின் அலுவலர்களிடம் கையளிக்கவேண்டும்.

**1. இலங்கை பிரஜைகள்/ இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரஜைகள் ஆகியோருக்கான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்**

➢ **கொவிட்-19 இற்கான பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசியைப் போட்டுக்கொண்டவர்கள் மற்றும் தடுப்பூசி போட்டு இரண்டு கிழமைகளைப் பூர்த்திசெய்தபின்னர் இலங்கைக்கு வருகை தருபவர்கள்**

1. கொவிட்-19 இற்கான பரிந்துரைக்கப்பட்ட அளவுள்ள தடுப்பூசி பெற்றிருத்தல் வேண்டும்
2. கொவிட்-19 இற்கான தடுப்பூசியைப் பெற்று இரண்டு வாரங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்
3. வருகையின்போது, தடுப்பூசி பெற்றுக்கொண்ட சான்றிதழின் மூலப்பிரதியையும், அச்சான்றிதழ் ஆங்கில மொழி தவிர்ந்த வேறு மொழியில் இருப்பின் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பினையும் விமான நிலைய சுகாதார அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. பயணிகள் அரசாங்க அதிகாரிகளால் ஒரு தனிமைப்படுத்தல் ஹோட்டலுக்கு/ நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்
5. நாட்டுக்கு வருகை தந்த 24 மணித்தியாலங்களில் (1 ஆம் நாள்), சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க / தனியார் துறை ஆய்வுக்கூடத்தினால் பயணிகளுக்கு கொவிட்-19 இற்கான ஒரு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
6. பி.சி.ஆர் அறிக்கை கிடைத்தவுடன், பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி, பி.சி.ஆர் பரிசோதனை முடிவு ஆகியவை குறிப்பிடப்பட்ட ஒரு வெளியேறும் ஆவணம் வழங்கப்பட்டு பயணிகளின் தனிமைப்படுத்தல் ஹோட்டலிலிருந்து/ நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர்.
7. அவர்கள் தமது சொந்தச் செலவிலே தத்தமது வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன், அப்பிரயாணத்தின்போது கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுதலும் கட்டாயமாகும்.
8. தத்தமது வீடுகளுக்குச் சென்றபின்னர் உடனடியாக அப்பகுதியின் மருத்துவ சுகாதார உத்தியோகத்தரிடம் (MOH) தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவித்து,

தனிமைப்படுத்தல் ஹோட்டலில்/ நிலையத்தில் வழங்கப்பட்ட வெளியேறல் ஆவணத்தையும் காண்பித்தல் வேண்டும்.

9. தமது பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தரிடம் (MOH) தாம் கொவிட்-19 இற்கான தடுப்பூசியைப் பெற்று பூர்த்திசெய்தமை, இலங்கைக்கு வந்த அன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவு எதிர்மறையாக வந்தமை ஆகியவற்றை அறிவித்த பின்னர், அவர்கள் மேற்கொண்டு தம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ளத் தேவையில்லை.
10. பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தர் (MOH), (பிரயாணியின் பெயர், கடவுச்சீட்டு இலக்கம், இலங்கைக்கு வந்த திகதி மற்றும் நேரம், வதிவிட முகவரி, தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம், வீட்டுக்கு/ தங்குமிடத்திற்கு வந்த திகதி ஆகிய) விபரங்களை, சுகாதார அமைச்சின் பிராந்திய தொற்றுநோயியல் நிபுணர் மற்றும் தொற்றுநோயியல் பிரிவு ஆகியவற்றுக்கு, chepid@sltnet.lk மற்றும் samithag@hotmail.com ஆகிய மின்னஞ்சல்கள் மூலமாக அறிவித்தல் வேண்டும்.
11. சகல பிரயாணிகளும், இலங்கைக்கு வந்த **7 ஆவது நாளில் மீண்டுமொரு தடவை பி.சி.ஆர் பரிசோதனையை** சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்ற அரசாங்க/ தனியார் துறை ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளவேண்டும்.
12. காய்ச்சல் அல்லது கொவிட்-19 இற்கான சுவாசம் சம்பந்தமான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்தல் வேண்டும்.
13. சகல பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளும் கிடைத்தவுடன், அவற்றை அந்தந்த பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தரிடம் (MOH) அறிவிக்கவேண்டும். அவர் அப்பரிசோதனை முடிவுகளை பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் மற்றும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவிற்கு மின்னஞ்சல் மூலம் அறிவிப்பார்.
14. பி.சி.ஆர் பரிசோதனை நேர்மறையாக வந்தால், அதுபற்றி பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்து, சுகாதார அமைச்சின் சிகிச்சை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

➢ **கொவிட்-19 தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத/ பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி அளவுகளைப் பூர்த்திசெய்யாத/ தடுப்பூசி பெற்றபின்னர் இரண்டு வாரங்களைப் பூர்த்திசெய்யாத பயணிகள்**

**அ) ஹோட்டலில் தனிமைப்படுத்தப்படும் பயணிகள் (ஒருவர் அல்லது குடும்ப உறுப்பினர்கள்)**

1. கொவிட்-19 இற்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் **1 ஆம் நாள் மற்றும் 7 ஆம் நாளில்** மேற்கொள்ளப்படவேண்டும்.
2. 1 ஆம் 7 ஆம் நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவுகள் எதிர்மறையாக இருந்தால், பயணிகள் ஏழு நாட்களைப் பூர்த்திசெய்த பின்னர் விடுவிக்கப்படுவார்கள்.
3. அவர்கள் சொந்தச் செலவில் தத்தமது வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், அப்பிரயாணத்தின்போது கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
4. இவர்கள் செல்லும் வாகனங்களின் சாரதிகள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து, கொவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
5. பயணிகள் தத்தமது இருப்பிடங்களை வந்தடைந்ததும் பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரிக்கு (MOH) தொலைபேசி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவித்து, தனிமைப்படுத்தல் ஹோட்டலில் தமக்கு 1 ஆம் மற்றும் 7 ஆம் நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை பெறுபேறுகள் அடங்கிய வெளியேறும் ஆவணத்தைக் காண்பித்தல் வேண்டும்.

6. மிகுதியுள்ள தனிமைப்படுத்தல் நாட்களை (மொத்தமாக 14 நாட்கள்), அவர்கள் பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரியின் (MOH கண்காணிப்பின் கீழ், தமது இருப்பிடங்களிலேயே கழித்தல் வேண்டும்.
7. தனிமைப்படுத்தல் காலத்தின்போது காய்ச்சல் அல்லது கொவிட்-19 இற்கான சுவாசம் சம்பந்தமான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்தல் வேண்டும்.
8. 1 ஆம் நாள் அல்லது 7 ஆம் நாளின் பி.சி.ஆர் பரிசோதனை எதிர்மறையாக வந்தால், அதுபற்றி பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்து, சுகாதார அமைச்சின் சிகிச்சை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

➢ பகிரப்பட்ட வசதிகளுடனான தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருக்கும் பயணிகள்

1. கொவிட்-19 இற்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் **1 ஆம் நாளிலும் 10 ஆம் நாளிலும்** மேற்கொள்ளப்படவேண்டும்.
2. பி.சி.ஆர் பரிசோதனைகளின் பெறுபேறுகள் இரண்டுமே நேர்மறையாகவிருப்பின், 10 ஆம் நாள் முடிவடைந்ததும் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.
3. அவர்கள் சொந்தச் செலவில் தத்தமது வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், அப்பிரயாணத்தின்போது கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
4. இவர்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களின் சாரதிகள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து, கொவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
5. பயணிகள் தத்தமது இருப்பிடங்களை வந்தடைந்ததும் பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரிக்கு (MOH) தொலைபேசி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவித்து, தனிமைப்படுத்தல் ஹோட்டலில் தமக்கு 1 ஆம் மற்றும் 10 ஆம் நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை பெறுபேறுகள் அடங்கிய வெளியேறும் ஆவணத்தைக் காண்பித்தல் வேண்டும்.
6. மிகுதியுள்ள தனிமைப்படுத்தல் நாட்களை (மொத்தமாக 14 நாட்கள்), அவர்கள் பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரியின் (MOH கண்காணிப்பின் கீழ், தமது இருப்பிடங்களிலேயே கழித்தல் வேண்டும்.
7. தனிமைப்படுத்தல் காலத்தின்போது காய்ச்சல் அல்லது கொவிட்-19 இற்கான சுவாசம் சம்பந்தமான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்தல் வேண்டும்.
8. 1 ஆம் நாள் அல்லது 10 ஆம் நாளின் பி.சி.ஆர் பரிசோதனை எதிர்மறையாக வந்தால், அதுபற்றி பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்து, சுகாதார அமைச்சின் சிகிச்சை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

2. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வரும் பயணிகளுக்கான தனிமைப்படுத்தல் நடைமுறைகள்

https://www.srilanka.travel/helloagain/ என்ற இணையதளம் ஊடாக இலங்கை சுற்றுலாத்துறையின் அனுமதியைப் பெறவேண்டும். இலங்கை அரசாங்கத்தினால் சுற்றுலாப்பயணிகளுக்கு விதிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

➢ கொவிட்-19 இற்கென பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி முறைகளைப் பூர்த்திசெய்து, தடுப்பூசி ஏற்றப்பட்டு இரண்டு வாரங்களைப் பூர்த்திசெய்த பின்னர் இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள்

1. வருகையின்போது, தடுப்பூசி பெற்றுக்கொண்ட சான்றிதழின் மூலப்பிரதியையும், அச்சான்றிதழ் ஆங்கில மொழி தவிர்ந்த வேறு மொழியில் இருப்பின் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பினையும் விமான நிலைய சுகாதார அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சுற்றுலாப்பயணிகளை, சுற்றுலாப்பயணிகளுக்கான சான்றிதழ் பெற்ற ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்படவேண்டும்.
3. நாட்டுக்கு வருகை தந்த 24 மணித்தியாலங்களில் (1 ஆம் நாள்), சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை ஆய்வுக்கூடத்தினால் சுற்றுலாப்பயணிகளுக்கு கொவிட்-19 இற்கான ஒரு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
4. சுற்றுலாப்பயணிகள் தங்கியிருக்கும் ஹோட்டல் நிர்வாகம், அப்பயணிகள் வந்தடைந்த முதல் நாளில், அவர்களின் பி.சி.ஆர் பரிசோதனை பெறுபேறுகளின் பிரதிகளை பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரியிடம் (MOH) சமர்ப்பித்தல் வேண்டும்.
5. சுற்றுலாப்பயணிகள் தடுப்பூசி பெற்றுக்கொண்ட சான்றிதழின் மூலப்பிரதியையும், அச்சான்றிதழ் ஆங்கில மொழி தவிர்ந்த வேறு மொழியில் இருப்பின் அதன் உறுதிப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பினையும் ஹோட்டல் நிருவாகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். தடுப்பூசி சான்றிதழில் பிரதியை ஹோட்டல் நிருவாகம் வைத்திருப்பதுடன், இப்பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, தடுப்பூசி பெற்றுக்கொண்ட சுற்றுலாப்பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.
6. 1 ஆம் நாளில் நடாத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவு எதிர்மறையாகவிருப்பின், சுற்றுலாப்பயணிகள் ஏழு நாட்கள் வரை அதே ஹோட்டலில் தங்கியிருப்பதுடன், 1 ஆம் நாளின் பி.சி.ஆர் முடிவு அறிக்கை கிடைத்த திகதியிலிருந்து ஒரு 'உயிரியல் பாதுகாப்புச் சூழலில்' (Bio Security Bubble) முக்கிய சுற்றுலா இடங்களுக்குச் சென்றுவரலாம்.
7. காய்ச்சல் அல்லது கொவிட்-19 இற்கான சுவாசம் சம்பந்தமான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்தல் வேண்டும்.
8. ஏழு நாட்களைப் பூர்த்திசெய்தபின்னர், அவர்கள் மறுபடியும் சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தனியார் அல்லது அரசாங்க ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு, அந்த முடிவும் எதிர்மறையாகவிருப்பின் அவர்கள், பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தரிடமிருந்து (MOH) இசைவுச்சான்றிதழைப் பெற்று, அந்த ஹோட்டலை விட்டுச் வெளியேறி, பயண முகவர் மூலமாக தமது சொந்த பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.
9. பி.சி.ஆர் பரிசோதனை நேர்மறையாக வந்தால், அதுபற்றி பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்து, சுகாதார அமைச்சின் சிகிச்சை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

➢ கொவிட்-19 தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல்/ பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி அளவுகளைப் பூர்த்திசெய்யாமல்/ தடுப்பூசி பெற்று இரண்டு வாரங்களைப் பூர்த்திசெய்யாமல் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்

1. சான்றிதல் பெற்ற ஒரு சுற்றுலாப்பயணிகளுக்கான ஹோட்டலில் கட்டாய தனிமைப்படுத்தல்
2. நாட்டுக்கு வருகை தந்த 24 மணித்தியாலங்களில் (1 ஆம் நாள்), சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை ஆய்வுக்கூடத்தினால் சுற்றுலாப்பயணிகளுக்கு கொவிட்-19 இற்கான ஒரு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

3. சுற்றுலாப்பயணிகள் தங்கியிருக்கும் ஹோட்டல் நிர்வாகம், அப்பயணிகள் வந்தடைந்த முதல் நாளில், அவர்களின் பி.சி.ஆர் பரிசோதனை பெறுபேறுகளின் பிரதிகளை பிரதேச மருத்துவ சுகாதார அதிகாரியிடம் (MOH) சமர்ப்பித்தல் வேண்டும்.
4. சுற்றுலாப்பயணிகள், 14 நாட்களுக்குள் இலங்கையிலிருந்து வெளியேறினால், அவர்களுக்கான இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையானது, அவர்கள் வெளியேறும் நாள் அன்று மேற்கொள்ளப்படுவதுடன் அப்பரிசோதனை முடிவு எதிர்மறையாகவும் இருத்தல் வேண்டும். (உ.ம்: சுற்றுலாப்பயணி 8 ஆம் நாளில் இலங்கையிலிருந்து வெளியேறுவாராயின், அவருக்கான பி.சி.ஆர் பரிசோதனை 6 ஆம் அல்லது 7 ஆம் நாளில் நடாத்தப்படும்).
5. சுற்றுலாப்பயணி ஒருவர், 96 மணித்தியாலங்களுக்கும் குறைவான காலத்திற்கு இலங்கையில் தங்கியிருப்பாரெனில், அவரது அடுத்த சேரிடத்திற்கு அல்லது விமானத்திற்கு தேவையென்றாலே தவிர, அவர் வெளியேறும் பி.சி.ஆர் பரிசோதனை செய்யத்தேவையில்லை.
6. சுற்றுலாப்பயணி ஒருவர் 14 நாட்களுக்கோ அதற்கு மேலோ இலங்கையில் தங்கியிருந்தால், இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையை 11 ஆம் நாளுக்கும் 14 ஆம் நாளுக்கும் இடையில் மேற்கொள்ளவேண்டும்.
7. முதலாம் நாளுக்கான பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவு எதிர்மறை எனில், அந்த சுற்றுலாப்பயணி, ஒரு 'உயிரியல் பாதுகாப்புச் சூழலில்' (Bio Security Bubble) முக்கிய சுற்றுலா இடங்களுக்குச் சென்றுவரலாம்.
8. சுற்றுலாப்பயணி ஒருவர், 14 நாள் பூர்த்தியடைவதற்கு முன்னர் தனது ஹோட்டலை மாற்றக்கூடாது. 14 நாட்களுக்கு மேல் இலங்கையில் தங்கியிருப்பாராயின், பி.சி.ஆர் முடிவுகள் எதிர்மறையாகவிருக்கும் பட்சத்தில் அவர் விடுவிக்கப்படுவார்.
9. காய்ச்சல் அல்லது கொவிட்-19 இற்கான சுவாசம் சம்பந்தமான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாக பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்தல் வேண்டும்.
10. முதலாம் நாள், மற்றும் 11-14 ஆம் நாள் பி.சி.ஆர் முடிவுகள் எதிர்மறையாகவிருப்பின் சுற்றுலாப்பயணி தனிமைப்படுத்தல் ஹோட்டலிலிருந்து விடுவிக்கப்படுவார்.
11. பி.சி.ஆர் பரிசோதனை நேர்மறையாக வந்தால், அதுபற்றி பிரதேச மருத்துவ சுகாதார உத்தியோகத்தருக்கு (MOH) அறிவித்து, சுகாதார அமைச்சின் சிகிச்சை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

மேற்குறிப்பிட்ட வழிமுறைகள், இந்நாட்டினதும் உலகளாவிய அளவிலுமுள்ள கொவிட்-19 நிலைப்பாட்டினைப் பொறுத்து புதுப்பிக்கப்படும்.

இது; எனது 04.12.2020 ஆம் திகதிய, 'கொவிட்-19 நோய்ப்பரவல் காலத்தில் கட்டாயமான/ நீடிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் காலத்தின் போதான மற்றும் அதற்குப் பின்னரான அல்லது தனிமைப்படுத்தல்/ இடைக்கால பராமரிப்பு நிலையங்கள்/ வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறிய பின்னரான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்' என்ற தலைப்பிலான DQ/06/2020 ஆம் இலக்க கடிதத்தின் திருத்தமாகும்.

(கையொப்பம்)

மருத்துவர் அசேல குணவர்த்தன

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

செயலாளர், சுகாதார அமைச்சு

செயலாளர், வெளிநாட்டமைச்சு
மேலதிக செயலாளர், பொது சுகாதார சேவைகள்/ மருத்துவ சேவைகள்
கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், சுங்க திணைக்களம்
பணிப்பாளர் நாயகம்/ இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
பணிப்பாளர் நாயகம்/ இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
தலைவர், கொவிட்-19 நோய்ப்பரவலைத் தடுப்பதற்கான தேசிய தொழிற்பாட்டு நிலையம்
தலைவர்/ விமான நிலைய போக்குவரத்து சேவைகள் (இலங்கை) லிமிட்டெட்